# වාර්ෂික වාර්තාව 2018

# வருடாந்த அறிக்கை 2018

# Annual Report 2018

## තල් සංවර්ධන මණ්ඩලය

## பனை அபிவிருத்திச் சபை

## Palmyrah Development Board



වැවිලි අමාත්‍යාංශය - பெருந்தோட்ட அமைச்சு - Ministry of Plantation

# வருடாந்த அறிக்கை 2018

**உள்ளடக்கம்** **பக்க இல.**


**(அ) தோற்றப்பாடு செயற்பாடு**

* பனை அபிவிருத்திச் சபை. 01
* தலைவரின் அறிக்கை. 02
* பொது முகாமையாளரின் அறிக்கை 03
* பணிப்பாளரின் அறிக்கை 04
* பணிப்பாளர் சபை. 05
* கணக்காய்வு மற்றும் முகாமைக்குழு. 05
* நிறைவேற்று முகாமைத்துவம். 05
* கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள் 06
* எமது நோக்கங்களும் இலக்குகளும். 07
* பனைவளம் 07-08

**(ஆ) செயல்திறன் தந்திரோபாயம் மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பான பார்வை**

* வியாபார நடைமுறைகளை அறிக்கையிடல் 09-19
* செயற்பாட்டுப் பெறுபேறுகளின் மீளாய்வு. 20
* நிதியியல் மீளாய்வு. 20
* ஆபத்து முகாமைத்துவம். 21
* உத்திகள். 21
* மனித மூலதனம் 21-22
* சூழல் பற்றிய அறிக்கையிடல். 22

**(இ) நிறுவன ஆளுகை**

* நிறுவன ஆளுகை 22
* பணிப்பாளர் சபைக்கூட்டங்கள். 22
* கணக்காய்வாளர் முகாமைத்துவக் குழு 22
* கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு அறிக்கை. 22
* உள்ளகக் கட்டுப்பாடு. 22-23
* முகாமைத்துவம். 23
* பிறவிடயங்கள் 23

**(ஈ) குறிப்பிடத்தக்க கணக்கியற் கொள்கைள்.**

* பொது கணக்கு கொள்கைகள். 24
* சொத்துக்களும் அவற்றின் பெறுமதியின் அடிப்படையும் 24
* பொறுப்புக்களும், ஒதுக்கங்களும். 25
* வருமான கூற்று. 26
* காசுப் பாய்ச்சல் 26
* அரசாங்க நிதியீட்டம் 26
* ஐந்தொகை 27
* நிதி நிலை மாற்றங்கள் பற்றிய கூற்று. 28
* நிதி முன்னேற்றக் கூற்று. 29
* வழங்கல் மாற்றங்களின் கூற்று. 30
* காசோட்டக் கூற்று. 31
* பாதீட்டு ஒப்பீட்டு அறிக்கை 32
* கணக்குகளுக்கான குறிப்புகள். 33-47

**(உ) தேசிய கணக்காய்வாளரின் அறிக்கை** 48-56

(அ) தோற்றப்பாடு செயற்பாடு

# பனை அபிவிருத்திச் சபை.

பனை அபிவிருத்திச் சபையானது 1971ம் ஆண்டின் 46ம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத் திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்ட 1975ம் ஆண்டின் 24ம் இலக்க சட்டத்தின் பிரகாரம் 18ம் திகதி ஆவணி மாத 1978ம் ஆண்டின் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மேலதிக தோட்டப் பயிர்ச் செய்கை அமைச்சின் கீழ் பனைசார் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கென உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். 2015ம் ஆண்டின் தை மாதம் 08ம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தற்போது சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்றது.







**தலைமை அலுவலகம்**
தேசிய வீடமைப்புச் செயலகம்,
கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 2222034
தொலைநகல்: 021 2224154

மின்னஞ்சல்: slpdbho@yahoo.com
இணையத்தளம்: www.pdb.gov.lk

## பனை அபிவிருத்திச் சபையின் பிரதான செயற்பாடுகளாவன.

- பனை நடுகையினை விரிவாக்கல்.
- தற்போதுள்ள மாதிரிப் பண்ணைகளை சீர் திருத்தலும் விரிவாக்கம் செய்தலும்.
- பனைசார் கைத்தொழில் பயிற்சிகளை நடாத்துதல்.
- பல்வேறு வகையான பனைசார் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்தல்.
- பனைசார் உற்பத்திப் பொருட்களை மேம்படுத்துதல்.
- பனைசார் உணவு உற்பத்திகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
- கற்பகம் விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## தலைவரின் செய்தி



இலங்கை பனை அபிவிருத்திச் சபையின் 2018ம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைக்காக எனது செய்தியை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். எமது சாதனை பயணத்தின் முக்கிய ஆண்டாக இவ்வாண்டு அமைகின்றது. குறிப்பாக எமது சிறந்த ஆழுமை நிறைந்த நிலையான நல்லாட்சியை மையமாக கொண்டு நீடித்த அபிவிருத்தியை நோக்கிய செயற்பாட்டில் சிறப்பான முகாமை கட்டுப்பாட்டின் கீழ் நடைமுறைப்படுத்த முடிந்தது.

பனை அபிவிருத்திச் சபையின் மூலோபாய ரீதியான சந்தைப்படுத்தல் திட்டமானது, எமது மூலோபாய திட்டத்துடன் இணைந்ததான நீண்ட நிலையான வளர்ச்சிக்கு உதவும். அதனடிப்படையில் எமது கற்பக விற்பனை நிலையங்கள் எமது உற்பத்திகளை அவர்களிற்கூடாக சந்தைப்படுத்தலை மேற்கொண்டு விற்பனையை அதிகரிக்கச் செய்வதுடன் வெளிநாட்டு சந்தையை மையமாக கொண்ட ஏற்றுமதியாளர்களை இனங்கண்டு அவர்களையும் ஊக்குவித்து இச்செயற்பாட்டில் பங்குதாரர்களாக மாற்றி எமது இலக்கு நோக்கிய பயணத்தை தொடரவுள்ளோம்.

அடுத்ததாக எமது முக்கிய குறிக்கோள்களில் பனையை நம்பி வாழும் குடும்பங்கள் மற்றும் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்களின் அபிவிருத்தியில் முக்கிய கவனம் செலுத்தி அதிகரித்து வரும் பனை சார் உற்பத்தி பொருட்களின் கேள்வியை ஈடுசெய்யும் முகமாக எமது அமைச்சின் நிதி பங்களிப்பு மற்றும் வழிகாட்டலுடன் எமது சபையானது ஒரு வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சி பகுதியானது தனது ஆராய்ச்சி செயற்பாட்டை சிறப்பான முறையில் செய்படுத்தி புதிய தொழில்துட்பங்களையும் புதிய உற்பத்திகளையும் இனங்கண்டு தொழிலில் ஈடுபடும் மக்களிற்கு ஆலோசனை வழிகாட்டல் சேவைகளை வழங்கும் அதே வேளை பல பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து பல ஆய்வுகளை மேற்கொண்டு தற்போதய போட்டி நிறைந்த சந்தையின் தேவைக்கு ஏற்ப எமது தொழிலை விரிவுபடுத்துவதற்கான வாய்பினை தொழில்முனைவோரிற்கு அடையாளப்படுத்த இவ்வாண்டு செயற்ப்பட்டு வருகிறது.

மேலும் எந்த ஒரு நிறுவன வளர்சியிலும் மிக முக்கிய பங்குவகிப்பது அந்நிறுவனத்தின் மனித வளமாகும் அந்த வகையில் ஊழியர்கள் தமது ஆற்றல் செயல்திறன் வெளிப்பாட்டை மேலும் வெளிப்படுத்தவும் திறன்களை மேம்படுத்தும் அதே வேளை எமது குறிக்கோளை நோக்கி எம்மை வழிநடாத்தி செல்ல உதவும் என்பதனை திடமாக நம்புகின்றோம்.

எமது இந்த சாதனை பயணத்தை நோக்கிய பாதையில் எமக்கு உறுதுணையாக இருந்து ஆதரவினை வழங்கிய சபை பணிப்பாளர்கள், ஊழியர்கள், மதிப்புக்குரிய வாடிக்கையாளர்கள், வழங்குனர்கள், மேலும் குறிப்பாக எமது கௌரவ அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

பனை அபிவிருத்திச் சபையானது அரசாங்கத்தினதும் ஏனைய பங்குதாரர்களினதும் நலன் விரும்பிகளினதும் ஒத்துழைப்புடனும், வழிகாட்டலுடனும் எதிர் காலங்களில் மேலும் உயர்ந்த, குறிக்கோளை அடையும் என்பதில் எனக்கு மட்டற்ற நம்பிக்கை உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வைத்திய கலாநிதி ஆர். சிவசங்கர்,
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

## பொது முகாமையாளரின் செய்தி



பனை அபிவிருத்திச் சபையானது 1978 ம் ஆண்டு இலங்கை பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டு, நிரல் அமைச்சினால் நியமிக்கப்படும் பணிப்பாளர் சபையால் நிர்வகிக்கப்படும் ஒரு தனித்துவமான நிறுவனமாகும். மேலும் யாழ்ப்பாணத்தை தலைமையகமாகவும் கொண்ட ஒரே அரச நிறுவனமாகும் இது திகழ்கின்றது. இவ்நிறுவனத்தின் முக்கியமான செயற்பாடு பனை தொடர்பான தொழில்களை ஊக்குவிப்பதாகும்.

தேசிய அபிவிருத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பனையை நம்பி வாழும் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு பனை அபிவிருத்திச் சபையின் பங்களிப்பு இன்றியமையாதது. அத்துடன் பனை சார்பான உற்பத்தி (பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி), சந்தைப்படுத்தல், பயிற்சி (தொழில்நுட்ப பரிமாற்றம்) மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றிற்கும் பனை அபிவிருத்திச் சபை முக்கிய பங்களிப்பை வழங்கி வருகின்றது.

2018ம் ஆண்டில், பனை அபிவிருத்திச் சபையின் மொத்த இலாபம் ரூபா 10.04 மில்லியனால் அதிகரித்துள்ளது. இந்த முன்னேற்றத்தின் முக்கிய வகிபாகமாக சந்தைப்படுத்தல் மூலம் பெறப்பட்ட ரூபா 50.25 மில்லியன் பங்களிப்பு செய்கின்றது. அதே சமயம் நடப்பாண்டில் பனை அபிவிருத்திச் சபை நடாத்திய கைப்பணிப் பயிற்சிகளால் பயிற்சி பெற்ற கிட்டத்தட்ட 559 கிராமப் பெண்கள் மூலம் ரூபா 40.95 மில்லியன் ஈட்டப்பட்டது. அதே சமயம் பனை அபிவிருத்திச் சபையில் பதிவு செய்த உற்பத்தியாளர்கள் மூலம் கிட்டத்தட்ட ரூபா 21.00 மில்லியன் மதிப்புள்ள பனையோலை சார்ந்த கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பனந் தோட்டங்களை புனரமைக்கும் நோக்கில் பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஆதரவுடன் 141,450 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டது. பனை அபிவிருத்திச் சபையினால் உற்பத்தி செய்யப்படும் பனை சார் பொருட்களின் வருடாந்த உற்பத்தி மதிப்பு ரூபா 16.00 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையினால் நடாத்தப்படும் பயிற்சித் திட்டங்களை மேம்படுத்தும் வகையில் கைதடியில் ஆரம்பிக்கப்படவுள்ள பனை வளம் சார் பயிற்சி நிறுவகத்திற்கான (Palmyrah Resource based Training Institute) கட்டிடப் பணிகள் படிப்படியாக நடைபெற்று வருகின்றது.

பனை ஆராய்ச்சி நிறுவனம் – நுண்ணுயிரியல் ஆய்வகத்திற்கான அங்கீகாரத்தை பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2012 முதல் 2017 வரை பனை ஆராய்ச்சி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் பங்குதாரர்களுக்கு பயிற்சிப் பட்டறைகள், கள விஜயங்கள் மற்றும் பயிற்சிகள் மூலம் பகிரப்பட்டது. பனை அபிவிருத்திச் சபை பணியாளர்களின் திறன் மேம்பாட்டிற்கு பல பயிற்சி நிகழ்வுகள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

ஒப்பீட்டளவில் சபையானது 216 பணியாளர்களைக் கொண்ட ஓர் சிறிய நிறுவனமாக இருந்தாலும், பணியாளர்களின் கடின உழைப்பு மற்றும் ஒத்துழைப்புடன் பல்வேறு துறைகளில் (சந்தைப்படுத்தல், விரிவாக்கம், உற்பத்தி, நிர்வாகம் மற்றும் ஆராய்ச்சி) குறிப்பிடத்தக்க மாற்றத்தை எங்களால் அடைய முடிந்துள்ளது.

மேலும், ஆராய்ச்சி முகாமைத்துவ குழு, விலை நிர்ணயக் குழு, மத்திய கொள்முதல் குழு, உயர் கட்டளைக் குழு போன்றவை, சரியான நேரத்தில் முடிவுளை எடுத்து, செயற்திறனை விரைவுபடுத்தி இவ்வாண்டு இச்சாதனையை சபை அடைய உறுதுணையாக இருந்துள்ளது.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் சபைக்கு வழங்கிய ஆதரவிற்காக நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எம்.பி.லோகநாதன்,
பொது முகாமையாளர்,
பனை அபிவிருத்திச் சபை.

# பணிப்பாளரின் அறிக்கை

## பொதுவான.

பனையுடன் தொடர்பான உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதோடு சமூக மேம்பாட்டையும் மேற்கொள்ளும் ஒரே அரச நிறுவனம் இதுவாகும்.

பிரதான காரியாலயம், யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றது. பிராந்தியக் காரியாலயங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இயங்குகின்றன. கொழும்பில் இயங்கும் நகரக் காரியாலயம், பிராந்தியக் காரியாலயங்கள், அமைச்சு, திறைசேரி மற்றும் ஏனைய முக்கிய நிறுவனங்கள் என்பனவற்றை இணைக்கும் காரியாலயமாக செயற்படுகின்றது.

## எதிர்காலத் திட்டங்கள்.

சபையினால் செயற்படுத்தப்பட்ட தொழிற்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை தொழிற் பயிற்சிக்கு உதவும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அரச நிறுவனங்களின் உதவியோடு முன்னெடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

## சபையின் தலைவரும் பணிப்பாளர்களும் – 2018.

1. வைத்திய கலாநிதி ஆர். சிவசங்கர் - தலைவர்
2. திரு. எம்.புவிராஜ் (திறைசேரி) - பணிப்பாளர்
3. திரு. வி.பிறேமச்சந்திரன் - பணிப்பாளர்
4. திரு. ஈ.அன்னலிங்கம் - பணிப்பாளர்
5. திரு. வி.பாலகிருஷ்ணன் - பணிப்பாளர்
6. கலாநிதி எஸ்.பாலகுமார் (முதுநிலை விரிவுரையாளர்)- பணிப்பாளர்
   (மருத்துவ பீடம் யாழ்பாணப் பல்கலைக்கழகம்)
7. திரு செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை - வேலைப் பணிப்பாளர்

## கணக்காய்வு முகாமைத்துவம்.

1. திரு. ஈ.அன்னலிங்கம் - தலைவர்
2. திரு. வி.பிறேமச்சந்திரன் - பணிப்பாளர்
3. திரு. எம்.புவிராஜ் (திறைசேரி) - பணிப்பாளர்

## நிறைவேற்று முகாமைத்துவம்

| பதவி | பெயர் | தொ.பேசி | மின்னஞ்சல் |
|---|---|---|---|
| பொது முகாமையாளர் | திரு. எம்.பி.லோகநாதன் | 077 7176322 | mblogan_cro@yahoo.com |
| பிரதிப் பொது முகாமையாளர் | திரு. இ.இராமேஸ்வரன் | 077 7317136 | ramanahmba@yahoo.com |
| முகாமையாளர் (நிதி) | திரு. வி.பி.தேவராசா | 077 7299386 | vptheva@yahoo.com |
| முகாமையாளர் (விரிவாக்கல்) | திரு. கா.கோபாலகிருஸ்ணன் | 077 3620584 | gkrishnan810@gmail.com |
| முகாமையாளர் (பிரயோக ஆராய்ச்சி) | திருமதி. எஸ்.ஜனார்த்தனன் | 077 9966601 | sumithira79@yahoo.com |
| முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) | திரு. ஜி.கே.வகாலதந்திரி | 071 2185399 | geethkw2009@yahoo.com |
| முகாமையாளர் (நிர்வாகம் & மனிதவளம்) | திரு. பா.சுதாகரன் | 076 6688337 | sbsuthaharan@yahoo.com |
| முகாமையாளர் (அபிவிருத்தி) | திரு. எஸ்.சிறீவிஜேந்திரன் | 077 3787380 | srthyln@yahoo.com |
| உள்ளகக் கணக்காய்வாளர் | திரு. என் சிவராசா | 077 3779614 | sivarajah21@gmail.com |
| முகாமையாளர் (உற்பத்தி) | திரு. பா.ரஜிபரன் | 077 8800660 | rajeev800@yahoo.com |

## கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள்

| | | |
|---|---|---|
| பெயர் | : | பனை அபிவிருத்திச் சபை. |
| சட்ட அந்தஸ்து | : | 1971ம் ஆண்டின் 46ம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத் திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்ட 1975ம ஆண்டின் 24ம் இலக்க சட்டத்தின் பிரகாரம். |
| ஆரம்பம் | : | 1978 |

| **பதிவு செய்யப்பட்ட அலுவலகம்** | **விலாசம்** | **தொ.பேசி/ நகல்** |
|---|---|---|
| தலைமை அலுவலகம் | தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம். | 021 2222034<br>021 2224154 |
| நகர அலுவலகம் | இல. 502, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06. | 011 2364406<br>011 2364405 |

**பிராந்திய அலுவலகங்கள்**

| | | |
|---|---|---|
| மட்டக்களப்பு | பார் வீதி, மட்டக்களப்பு. | 065 2223179 |
| திருகோணமலை | உட்துறைமுக வீதி, திருகோணமலை. | 026 2224039 |
| அம்பாறை | இல: 20, தே.வீ.செ.கட்டிடம் கல்முனை. | 067 2220405 |
| புத்தளம் | பஸ் நிலையம் அருகாமை, கல்பிட்டி. | 032 2260749 |
| மன்னார் | பன்சாலை வீதி, சாந்திபுரம், மன்னார். | 023 2222373 |
| வவுனியா | இல: 67-68, பசார் வீதி,வவுனியா. | 024 2222483 |
| முல்லைத்தீவு | A9 வீதி, மாங்குளம், முல்லைத்தீவு. | 021 2060042 |
| கிளிநொச்சி | கண்டி வீதி, கிளிநொச்சி. | 021 2285638 |
| அம்பாந்தோட்டை | வெல்லவாய வீதி, வீரவில. | 047 3221201 |
| கொழும்பு | அமைச்சு அலுவலகம் | 011 2574416 |
| மின்னஞ்சல் | slpalmyrah@gmail.com & slpdbho@yahoo.com | |
| இணையத்தளம் | www.pdb.gov.lk | |
| கணக்காய்வாளர் | தலைமை அதிபதி, கணக்காய்வாளர் திணைக்களம். | |
| சட்ட ஆலோசகர் | சட்டமா அதிபர், சட்டத் திணைக்களம். | |
| வங்கி | இலங்கை வங்கி | |

## எமது நோக்கங்களும் இலக்குகளும்.

சபையின் இலக்குகளும் நோக்கங்களும் பின்வருமாறு:-

- ❖ பனையை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி மற்றும் சமூக மேம்பாட்டிற்கு உதவத்தக்க நிறுவன ரீதியான அடித்தளத்தை வழங்குதல்.
- ❖ இலங்கையில் பனையை அடிப்படையாகக் கொண்ட தொழில் துறையின் நிலையான அபிவிருத்திக்கு நுண்ணிய, மத்தியதர, உயர்தொழில்நுட்ப மட்டங்களில் விஞ்ஞான ரீதியான சிறந்த அடித்தளத்தை ஏற்படுத்துதல்.
- ❖ அடிப்படை உத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப அபிவிருத்திக்கு வழிகாட்டத்தக்க பிரயோக ஆய்வுகள் மூலமாக பனைப் பயிரின் பாதுகாப்பு, பேணுகை, உற்பத்தி, அபிவிருத்தி என்பனவற்றுக்கான தொழில்நுட்ப முறைகளை அபிவிருத்தி செய்தல்.
- ❖ ஒன்றிணைந்த அபிவிருத்தி முயற்சிகளை நோக்கமாகக் கொண்டு பனை மற்றும் கால்நடை அபிவிருத்தி என்பனவற்றினை மேம்படுத்தல்.
- ❖ பனை அபிவிருத்திச் சபையின் மூலம் உருவாக்கப்படும் தொழில்நுட்ப முறைகளை இத்துறை சார்ந்து தங்கியிருப்போருக்கும் தொழிலதிபர்களுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் வண்ணம் இடம் மாற்றுதல்.
- ❖ பனை உற்பத்திக்குரிய வளங்களின் தேசிய களஞ்சியமாகச் செயற்படுதலும், பயிரிட உதவும் உபகரணங்களை சிறந்த முறையில் தயாரித்தலும்.
- ❖ பனை தொடர்பான தொழில்நுட்பத் தகவல்களை நடைமுறைப்பிரயோகங்களுக்கேற்ப பிரசித்தி பெற்ற விளக்கங்களோடு ஒப்பிடுதலும் பரப்புதலும்.
- ❖ பனையுடன் தொடர்பான நிறுவனரீதியான அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றின் ஊடாக உற்பத்தி முறைகளின் முகாமைத்துவத்தில் பல்வேறு தெரிவுகளை மேம்படுத்தலும் கிடைக்கச் செய்தலும்.

### பனை வளம்

பனை மரமானது அரக்கேசியா (Arecaceae) எனும் தாவரக்குடும்பத்திலுள்ள பொராசஸ் (Borassus) என்னும் தாவர இனத்தை சார்ந்ததாகும். பனை மரமானது தெற்கு ஆபிரிக்கா, தென்கிழக்கு ஆசியா, இந்தோனேசியாவின் வடக்குப் பகுதி போன்ற இடங்களிலும் பரவிக் காணப்படுகின்றது.

இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து நாடுகளில் காணப்படுகின்ற பனை மரங்களின் எண்ணிக்கைகள் முறையே மில்லியனில் 80, 11, 10 மற்றும் 02 ஆகும்.

**இலங்கையில் பனை மரத்தின் பரம்பல் விபரம்**

| மாவட்டம் | பனை மரங்கள் |
|---|---:|
| யாழ்ப்பாணம் | 3,500.000 |
| கிளிநொச்சி | 3,500,000 |
| மன்னார் | 3,000,000 |
| முல்லைத்தீவு | 500,000 |
| திருகோணமலை | 210,000 |
| மட்டக்களப்பு | 200,000 |
| புத்தளம் | 120,000 |
| அம்பாறை | 40,000 |
| அனுராதபுரம் | 40,000 |
| வவுனியா | 8,000 |
| அம்பாந்தோட்டை | 2,000 |
| **மொத்தம்** | **11,120,000** |

## பனைவள உற்பத்திகளின் விபரம்

| |
|---|
| **பனஞ்சாற்று அடிப்படையிலான உற்பத்தி** |
| i)நொதிப்படையாதவை: பனைவெல்லம்,பனம்பாணி,பதனீர்,கல்லாக்காரம்<br>ii)அற்ககோல் உற்பத்திகள் : சாராயம், போத்தலில் அடைக்கப்பட்ட கள்,<br>iii)நொதிப்படைந்த உற்பத்திகள்: வினாகிரி |
| **பனங்களி அடிப்படையிலான உற்பத்திகள்:** |
| போத்தலில் அடைக்கப்பட்ட பனங்களகளி, பனாட்டு, பாணிப்பனாட்டு, ஜாம், கோடியல், உடனடிப்பானம், மருத்துவ அடிப்படையிலான உற்பத்திகள். |
| **கிழங்கு அடிப்படையிலான உற்பத்திகள்:** |
| கிழங்கு, பச்சை ஒடியல், ஒடியல்மா, புளுக்கொடியல்மா, பாம்போசா, பிஸ்க்கட், கேக் |
| **பனை ஓலையினாலான உற்பத்திகள்:** |
| பாரம்பரிய கைப்பணிகள்:- நாரினால் பின்னப்பட்ட கூடை, பின்னல் கதிரை, கயு பொதிசெய்யும் பெட்டி, தேயிலைப் பெட்டி, தொப்பிகள், பாய்கள், ஈர்க்கில் உற்ப்பத்திகள், தும்பு உற்பத்தி, பல் துப்பரவு செய்யும் குச்சி, பூப்பானைகள், சுவர்மாட்டிகள், தும்பு கழிவுகள் மூலம் பூங்கன்றுகள் வளர்க்கும் பொருள், மண்சாடிகள் |
| **தும்பு அடிப்படையிலான பொருட்கள்:** |
| வைரத்தும்பு- தும்பு பிறஸ், நடுத்தர தும்பு- வீட்டுப்பொருட்கள் துப்பரவு செய்யும் பிறஸ், |
| **மரத்தாலான உற்பத்திகள்:** |
| கட்டடக்கூரைகள் உருவாக்கல், வீட்டுத்தளபாடங்கள் உருவாக்கல், சிப்போட், விறகுப்பயன்பாடு |










பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டு நாட்டின் ஏனைய பகுதிகளில் ஒன்பது பிராந்திய நிலையங்களையும், பதினேழு கற்பக விற்பனை நிலையங்களையும் 11 உற்பத்தி நிலையங்களையும், ஒரு ஆராய்ச்சி நிலையம், ஒரு பனை வடிசாலை அத்துடன் 11 மாதிரிப் பண்ணைகளும் நிர்வகிக்கப்படுகின்றன. அவற்றின் விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**(ஆ) செயல்திறன் தந்திரோபாயம் மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பான பார்வை**

- **வியாபார நடைமுறைகளை அறிக்கையிடல்**

## அபிவிருத்திப் பகுதி

**1. பனை விதை நடுகை செயற்பாடுகள்.**

பனை நடுகைக்குரிய மூலப்பொருட்கள் அடிப்படையிலான உணவு மற்றும் விநியோகத்தர்கள் மூலமாகவும் சுற்றாடலில் கிடைக்கக்கூடியதாக உள்ளது.

பனை அபிவிருத்திச் சபையானது ஒரு அரச நிறுவனமாக இருந்து கொண்டு பனை தொடர்பான கைத்தொழிலையும் பனை நடுகையையும் ஏற்கனவேயுள்ள பனை மரங்களை பாதுகாத்தல் நடவடிக்கையும் மேற்கொண்டுள்ளது. வருடா வருடம் அக்டோபர் மாதத்திலிருந்து டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் பனை நடுகைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

இப்பனம் விதைநடுகைத் திட்டம் இலங்கை பூராவும் பிரதேச செயலகங்கள் மாவட்டச் செயலகங்கள் உள்ளூர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றினுடாக மேற்கொள்ளப்படுகின்றது. நடுகை செய்யப்படும் இடங்கள் பிரதானமாக அரசகாணிகள் வீட்டுக்காணிகள் அரசகாணிகளின் பகுதியாகும்.

**கடந்த மூன்று ஆண்டுகளில் நடுகை செய்யப்பட்ட பனை விதைகள்.**

| **மாவட்டங்கள்** | **2016** | **2017** | **2018** |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 134,000 | 166,000 | 101,450 |
| கிளிநொச்சி | —— | 5,000 | —— |
| முல்லைத்தீவு | —— | 40,000 | —— |
| மட்டக்களப்பு | 40,000 | 20,000 | 40,000 |
| அம்பாறை | —— | 10,000 | —— |
| புத்தளம் | —— | 30,000 | —— |
| **மொத்தம்** | **174,000** | **271,000** | **141,450** |

**2. சட்ட விரோத பனை தறித்தலை கட்டுப்படுத்தல்**

சட்டவிரோத அல்லது தான்தோன்றித்தனமான பனை தறித்தல் செயற்பாடுகள் காரணமாக பனை கைத்தொழில் துறை பல்வேறு சவால்களிற்கு முகம் கொடுத்து வருன்றது. பனை மரமானது குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் காலம் காலமாக வீடுகளின் கூரை வேலைகளிற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றமையால், ஏனைய தேவைகளிற்கு பயனற்ற அல்லது உற்பத்தி திறன் குறைந்த வலிமையான மரங்கள் மேற்படி தேவைக்காக சரியான ஆய்வின் பின்னர் அனுமதி வழங்கப்பட்டு வருன்றது. அத்தோடு எமது நாட்டில் தற்போது மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி செயற்பாடுகளான வீதி அபிவிருத்தி, மின்சார விநியோகம், வீட்டுத்திட்டங்களிற்கான காணி துப்பரவாக்கல் காரணமாக பனை மரம் வெட்டப்படுவது தவிர்க்கமுடியாதாக உள்ளது.

பனை தறித்தல் செயற்பாடானது சூழலில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதனை கவனத்தில் கொண்டு பிரதேச செயலக மட்டத்தில் அவர்களுடன் இணைந்து பனை தறித்தலின் தேவைப்பாடுகளை சரியாக இனங்கண்டு, எமது உத்தியோகத்தர்களால் அனுமதி வழங்கப்பட்டுவருகின்றது. இதற்கு மேலதிகமாக சட்டவிரோதமாக தறிக்கப்படும் பனை மரங்களிற்காக, அதனோடு தொடர்புடையவர்களிற்கு எதிராக கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக பனை தறித்தலை ஓரளவிற்கு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடிகின்றது.

**கடந்த மூன்று ஆண்டுகளில் பனை தறித்த விபரம்.**

| மாவட்டங்கள் | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 20,284 | 12,619 | 9,240 |
| மன்னார் | 3,735 | 2,843 | 2,611 |
| வவுனியா | 00 | 21 | 32 |
| கிளிநொச்சி | 2,671 | 1,440 | 644 |
| முல்லைத்தீவு | 131 | 081 | 82 |
| திருகோணமலை | 941 | 442 | 478 |
| மட்டக்களப்பு | 690 | 689 | 593 |
| அம்பாறை | 00 | 68 | 119 |
| புத்தளம் | 00 | 00 | 111 |
| **மொத்தம்** | **28,452** | **18,203** | **13,910** |

**3. மாதிரிப் பனம் பண்ணைகள்.**

பனை மாதிரிப் பண்ணைகளில் பனை செய்கை மேற்கொள்ளப்படுகின்றபோது பொருத்தமான ஊடுபயிர்கள் நடுகை செய்யப்படுகின்றது. இப்பண்ணைகளானது பொது மக்கள் தங்களின் சொந்தக்காணிகளில் பனையை நடுகை செய்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தி தெளிவுபடுத்துபவையாகவும் காணப்படுகின்றது. எனவே இளம் பனைகள் வருமானத்தை தரமுடியாதவை என நாம் எதிர்பார்க்கமுடியாது. ஆனால் இதை முறையாக பராமரித்தால் எதிர்காலத்தில் சிறந்த பயன்களைப் பெறலாம்.

**மாதிரிப் பண்ணைகளின் விபரம்**

| மாவட்டம் | இடமும் பரப்பளவும் | பிரதான பயிர்கள் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | மாமுனை – 200 ஏக்கர் | பனை மற்றும் மரமுந்திரிகை |
| | நெடுந்தீவு – 05 ஏக்கர் | வடலிகள் |
| | குடத்தனை – 10 ஏக்கர் | வடலிகள் |
| வவுனியா | புளியங்குளம் – 10 ஏக்கர் | வடலிகள், எலுமிச்சை |
| கிளிநொச்சி | ஊற்றுப்புலம் – 50 ஏக்கர் | வடலிகள் (5 – 10 வருடங்கள்) |
| | கௌதாரிமுனை – 10 ஏக்கர் | வடலிகள் (2 – 3 வருடங்கள்) |
| | முழங்காவில் – 02 ஏக்கர் | வடலிகள் |
| ஹம்பாந்தோட்டை | வீரவில – 22 ஏக்கர் | பனை மற்றும் வருடாந்த பயிர்கள் வாழை, எள்ளு |

**துறை அபிவிருத்தி**

- பனை வளம் ஒரு நீண்டகால முதலீட்டுக்குரியதுடன் அதில் நேரடியாக தங்கியிருக்கின்ற குடும்பங்களுக்கு சிறந்த வாழ்வாதாரமாக உள்ளது.
- மேலதிகமாக நடுகை செய்யப்படுகின்ற பனை முழுச் சமுகத்திற்கும் இயற்கைச் சமநிலை மற்றும் சூழல் பாதுகாப்பை தருகின்றது.
- பனை உயிரியல் வேலைத்திட்டம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது எல்லைப்புற கிராமங்களில் யானையினால் ஏற்படுகின்ற பாதிப்புகளைத் தடுக்கன்றது.
- எல்லைப்புற காணிகளில் பனம் விதை நடுகை ஊக்குவிக்கப்படுகின்றது.
- களவாக பனை தறிப்பதை தடுக்க பிரதேச செயலகங்கள் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது
- முதிர்ச்சியடைந்த பனை மரம் வீட்டுக்கூரைக்கு மிகவும் பயனுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணத்தின் தேவையைப்பூர்த்தி செய்ய 80வீதத்திற்கு மேலான மரம் தேவையாகும். பிரதேச செயலகங்களின் கணக்கீட்டின்படி வருடாந்தம் 20,000 முதிர்ச்சியடைந்த பனை மரங்கள் வெட்டப்படுகின்றன. இத்தரவின்படி வருடாந்தம் கிட்டத்தட்ட 140 மில்லியன் ரூபா ஜிடிபி க்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

## விரிவாக்கல் பிரிவு

பனை அபிவிருத்தி சபையானது தொழிநுட்ப பரிமாற்ற நிகழ்வுகளையும் உள்வாங்கியுள்ளது. இச்செயற்பாடு வறிய கிராம மக்கள் மற்றும் மகளிர் குழுக்களுக்கான திறன் விருத்தி, தொழிற் கல்வி பயிற்சி ஊடாக வழங்கப்பட்டுள்ளது. பனை ஓலை பயிற்சியே விரிவாக்கல் பகுதி மூலம் பிரதானமாக வழங்கப்படுகின்றது. எனினும் உற்பத்திப் பகுதி மற்றும் ஆராய்ச்சி பகுதியின் அனுசரனையோடு பனம்களி, பனம்சாறு, தும்பு மற்றும் மரம் சார் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றது.

1. **தொழில்நுட்ப விரிவாக்கல் பயிற்சிகள்:**

சபையினுடைய நன்கு பயிற்றப்பட்ட கிட்டத்தட்ட 50 கைவேலை ஆசிரியர்களினால் கைவேலை பயிற்சிகள் நடாத்தப்படுகின்றன. வேலையற்ற வறிய கிராம மக்கள், பாடசாலையில் இருந்து இடைவிலகியவர்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு சுயதொழிலில் ஈடுபட பயிற்சிகளை வழங்குவதற்கு வெவ்வேறு கிராமங்களிற்கு தலைமை அலுவலகம் ஊடாக அனுப்பப்பட்டார்கள். இந்த பயிற்சிகள் சபையினுடைய மாவட்ட முகாமையாளர்களால் ஒழுங்கமைத்து மேற்பார்வை செய்யப்பட்டது. இதில் ஆறு மாத பயிற்சிகள் புதிய பயிலுனர்களிற்காகவும் மூன்று மாத பயிற்சிகள் புதிய தொழில் நுட்பங்களை உட்புகுத்துவதற்காக ஏற்கனவே தொழிலில் ஈடுபடுபவர்களிற்கு வழங்கப்படுகிறது. இதன் மூலம் வருடாந்தம் நூற்றுக்கு மேற்பட்ட சுயதொழில் முனைவோர்கள் உருவாக்கப்படுகின்றார்கள்.

பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் உற்பத்தி பகுதியில் பணியாற்றும் துறை சார் உத்தியோகத்தர்களின் வழிகாட்டல்களின் கீழ் பனை சார் உணவு உற்பத்தி, பனங்களி பதப்படுத்தல், பனை மரம் சார் கைப்பணிபொருட்கள் உற்பத்தி போன்றவற்றின் தேவை மற்றும் வேண்டுகோளிற்கிணங்க பயிற்சிகள் வருடாந்தம் இடம்பெறுகின்றது.

இப்பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்த பின், அவர்கள் பனை அபிவிருத்தி சபையின் உற்பத்தி குழுவுடன் அல்லது பனை சார் சங்கங்களுடன் இணைந்து சிறிது காலத்தின் பின் சந்தையின் தேவைக்கமைய பனை சார்ந்த உற்பத்தி துறையில் ஈடுபடுத்துவதற்கு அவர்களுக்கு உதவியும் ஒத்துழைப்பும் வழங்கி, அவர்களது தரமான உற்பத்திகளை கற்பகம் விற்பனை நிலையம் ஊடாக சந்தைப்படுத்தப்படுகின்றன. மேலும் இவ்உற்பத்திகளிற்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதிப்படுத்துவதோடு, தர பரிசீலனை மற்றும் ஆய்விற்கு தேவையான ஒத்துழைப்புகள் போன்றன காலத்திற்கு காலம் வழங்கப்பட்டு வருகின்றது.

**கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்ட கைப்பணி பயிற்சி விபரம்.**

| மாவட்டம் | பயிலுனர்கள் - 2016 | பயிலுனர்கள் - 2017 | பயிலுனர்கள் - 2018 |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 177 | 87 | 51 |
| கிளிநொச்சி | 160 | 51 | 20 |
| முல்லைத்தீவு | 118 | 63 | 35 |
| வவுனியா | 75 | 50 | 46 |
| மன்னார் | 86 | 39 | 20 |
| புத்தளம் | 94 | 35 | 23 |
| திருகோணமலை | 120 | 117 | 20 |
| மட்டக்களப்பு | 617 | 221 | 234 |
| அம்பாறை | 97 | 107 | 70 |
| அம்பாந்தோட்டை | 15 | 38 | - |
| குருநாகல் | 11 | 24 | 20 |
| அனுராதபுரம் | 41 | 40 | 20 |
| **மொத்தம்** | **1,611** | **872** | **559** |

**கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தியாளர்களால் வழங்கப்பட்ட கைப்பணி பெறுமதி**

| ஆண்டு | உற்பத்தி செயற்பாட்டில் ஈடுபட்ட உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை | உற்பத்தி பெறுமதி ரூபா மில்லியன் |
|---|---|---|
| 2016 | 1091 | 12.39 |
| 2017 | 1327 | 13.26 |
| 2018 | 2112 | 20.74 |

**2018ம் ஆண்டில் இடம்பெற்ற ஏனைய பனை சார் பயிற்சிகள்**

| பயிற்சியின் வகை | பயிற்சி நிலையங்களின் எண். | பயிற்சிகளின் எண். |
|---|---|---|
| பனங்களி உற்பத்தி | 08 | 166 |
| பனை உணவு பதப்படுத்தல் | 01 | 26 |
| பனை மர உற்பத்திகள் | 01 | 05 |

**பயிற்சியாளர் பயிற்சி :**

விசேட பயிற்சி செயற்திட்டமானது பனங்கைப்பணி பயிற்சியாளர்களின் திறன் விருத்திக்காக மூன்று (3) நாட்களை உள்ளடக்கிய வதிவிட பயிற்சி நெறியாக ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பயிற்சி நெறியானது பதினொரு (11) வளவாளர்களை கொண்டு நாற்பத்தியாறு (46) கைப்பணி போதனாசிரியர்களிற்காக நடைமுறைப்படுத்தப்பட்டது. மேற்படி பயிற்சி நெறியானது பல்வேறு வகையான பனங்கைப்பணி அபிவிருத்தி தொடர்பாக கிராம மட்டத்தில் சிறப்பாக முன்னெடுப்பதுடன், அவற்றை அபிவிருத்தி செய்வதன் அவசியம் தொடர்பாகவும் விரிவான விளக்கம் வழங்கப்பட்டது.

**2. பனை சார் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கை நெறி பாடவிதானம் (NVQ நிலை 05).**

பனை சார் பயிற்சிப் பாடசாலைக்கான நிர்மானப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், பாடவிதானம் தயாரிக்கப்பட்டு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப்பெற்றதும் பயிற்சிகள் NVQ நிலை 05 இற்கு தரப்படுத்தப்படும்.

**3. பனை சார் உற்பத்தியாளர் சங்கம் உருவாக்கம்.**

பனைசார் உற்பத்தி செயற்பாட்டினை அபிவிருத்தி செய்து வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து பனை சார் உற்பத்தியாளர் சங்கங்களை பனை அபிவிருத்தி சபையின் கீழ் அதன் நியமங்களிற்கமைய பதிவு செய்துவருகின்றது.

**2018ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட உற்பத்தி குழுக்கள் விபரம்.**

| மாவட்டம் | சங்கங்களின் எண்ணிக்கை | அங்கத்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 23 | 762 |
| கிளிநொச்சி | 8 | 212 |
| வவுனியா | 3 | 78 |
| முல்லைத்தீவு | 3 | 50 |
| மன்னார் | 5 | 172 |
| மட்டக்களப்பு | 17 | 484 |
| புத்தளம் | 5 | 70 |
| திருகோணமலை | 5 | 135 |
| அம்பாறை | 6 | 149 |
| **மொத்தம்** | **74** | **2112** |

## நிர்வாகப் பிரிவு.

### மனிதவள, ஆளணி முகாமைத்துவம்

**i) உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்**

1. செல்வி. பி.காயத்திரி - முகாமைத்துவ உதவியாளர்
2. திரு. பி.கஜன் - தொழில்நுட்ப உதவியாளர்
3. திரு. ரி.மகேஸ்வரன் - தொழில்நுட்ப உதவியாளர்
4. திரு. ஆர்.மதனதாஸ் - முகாமைத்துவ உதவியாளர்
5. திரு. கே.கோபிநாத் - சாரதி
6. திரு. ரி.உதயகுமார் - சாரதி
7. திரு. என்.சிவகுமார் - சாரதி
8. திரு. என்.பவாநந்தன் - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)
9. செல்வி. கே.மாதங்கி - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)
10. திருமதி. ஆர்.அஜந்தா - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)
11. திரு. டி.சஞ்ஜயன் - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)

**ii) பதவி உயர்வு வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள்.**

1. திருமதி. ய.புவனேசமூர்த்தி - மாவட்ட முகாமையாளர்
2. திரு. பா.ரஜிபரன் - முகாமையாளர் (உற்பத்தி)
3. திரு. ம.நிருஷன் - கணக்குப் பதிவாளர்
4. திரு. க.அபராசுதன் - உற்பத்தி உதவியாளர்
5. திரு. ஆர்.சசிகுமார் - அபிவிருத்தி உதவியாளர்

**iii) ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்.**

1. திருமதி. எஸ்.இமாவதி - தொழிலாளி
2. திரு. எஸ்.அந்தோனிப்பிள்ளை - பாதுகாப்பு உத்தியோகத்தர்
3. திருதி. எஸ்.ஜெகசோதி - முகாமைத்துவ உதவியாளர்

**iv) பதவி விலகிய உத்தியோகத்தர்கள்**

3. திருமதி. ஜே.சுகாநந்தி - உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்
4. செல்வி. எஸ்.யோகநாயகி - முகாமைத்துவ உதவியாளர்

**v) ஆளணி நிலை 31-12-2018.**

| தொ. இல. | பதவிநிலைப் பெயர்கள் (31-12-2018 வரை) | அனுமதிக்கப்பட்ட ஆளணி எண். | தற்போதைய ஆளணி எண். |
|---|---|---|---|
| 1 | நிறைவேற்று உத்தியோகத்தர் | 28 | 26 |
| 2 | மேற்பார்வையாளர்/ தொழில்நுட்ப உத்தியோகத்தர்/ விற்பனையாளர் | 19 | 09 |
| 3 | முகாமைத்துவ உதவியாளர் | 69 | 64 |
| 4 | போதனாசிரியர் மற்றும் சாரதிகள் | 62 | 65 |
| 5 | தொழிலாளர் | 49 | 50 |
| 6 | அமைய மற்றும் பயிற்சி | - | 01 |
| | மொத்த ஊழியர் எண்ணிக்கை | **227** | **215** |

**vi) நிறுவன அமைப்பு விளக்கப்படம்**



**vii) பயிற்சி திட்டம்/ திறன் அபிவிருத்தி**

**பயிற்சி 1: மூலோபாய திட்டமிடல் தொடர்பான பட்டறை**

**காலப்பகுதி:** 1 நாள் (17/08/2018) **வளவாளர்:** திரு. ம.இரேனியஸ் ஷெல்வின்

பங்கேற்பாளர்கள்: தலைமை அலுவலக பணியாளர்கள்

இடம்: 3ம் மாடி, தேசிய வீடமைப்பு அதிகாரசபை கட்டடம்.

குறிக்கோள்:

- பனை அபிவிருத்திச் சபையின் வளர்ச்சிக்கான மூலோபாய திட்டம்.
- ஊழியர்கள் மற்றும் சபையை வலுப்படுத்த தேவையான புதிய திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக விவாதித்து திட்டமிடல்.

**பயிற்சி 2: நிறைவேற்று முகாமையாளர்களுக்கான திறன் விருத்தி.**

**காலப்பகுதி:** 3 நாட்கள் **வளவாளர்:** திரு. ம.இரேனியஸ் ஷெல்வின்

பங்கேற்பாளர்கள்: பொது முகாமையாளர், நிறைவேற்று முகாமையாளர்கள்.

குறிக்கோள்: 2019ற்கான திறன் மற்றும் மூலோபாய திட்டமிடலை ஊக்கப்படுதலும் மேம்படுத்தலும்.

**பயிற்சி 3: களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் கொள்முதல் நடைமுறை தொடர்பான பட்டறை.**

**காலப்பகுதி:** 2 நாட்கள் (2,3-08-2018)

**வளவாளர்:** தொழிற்துறை அபிவிருத்தி நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.

பங்கேற்பாளர்கள்: திரு. எ.ஜோய் ஜயந்தன், முகாமைத்துவ உதவியாளர் (களஞ்சிய காப்பாளர்).

குறிக்கோள்: களஞ்சிய முகாமைத்துவ செயற்பாடுகளை மேம்படுத்தவும் களஞ்சிய நிர்வாக உத்திகளை ஊக்கப்படுத்தலும்.

**பயிற்சி 4: மொழிப் பயிற்சி**

**காலப்பகுதி:** 6 மாதங்கள் (18 ஆனி - 18 மார்கழி) **வளவாளர்:** திரு. என்.எஸ்.கனகலிங்கம்.

பங்கேற்பாளர்கள்: பனை அபிவிருத்திச் சபை பணியாளர்களில் சிங்கள அறிவை மேம்படுத்த விருப்பும் முகாமைத்துவ உதவியாளர்கள் (2ம் தொகுதி).

குறிக்கோள்:
- சிங்கள மொழியில் பேசுதல், கேட்டல், வாசித்தல் மற்றும் எழுதும் திறன்களை மேம்படுத்தி விரிவாக்குதல்.
- சிங்கள மொழில் நம்பிக்கையுடன் தங்களை வெளிக்காட்டல்.
- சரியான முறையில் சிங்கள மொழியை பயன்படுத்தல்.

**பயிற்சி 5: கணினி பயன்பாடு குறித்த பயிற்சி**

**காலப்பகுதி:** 100 மணித்தியாலங்கள் **வளவாளர்:** தொழில் பயிற்சி அதிகாரசபை.

பங்கேற்பாளர்கள்: கணினி திறன்களை மேம்படுத்த ஆர்வமுள்ள ப அ ச பணியாளர்கள்.

குறிக்கோள்:
- நவீன தொழில்நுட்பம் மற்றும் நுட்பங்களின் நடைமுறையுடன் பரீட்சயமாதல்.
- நவீன அமைப்பில் மக்கள் தொடர்பு செயற்பாடுகளை வலியுறுத்தல்.
- பயிற்சியாளர்களை அலுவலக நடடிக்கைகளில் இணைத்துக்கொள்ளல்.

உள்ளடக்கம்:
- ✓ இயக்க முறைமை.
- ✓ சொல் செயலாக்கம் (மைக்ரோசொப்ட் வோர்ட்)
- ✓ விரிதாள் (மைக்ரோசொப்ட் எக்செல்)
- ✓ தரவுத்தள முகாமைத்துவம் (மைக்ரோசொப்ட் அக்சஸ்)
- ✓ விளக்கக் காட்சி (மைக்ரோசொப்ட் பவர் பொயிண்ட்)
- ✓ இணையம்/ மின்னஞ்சல்

**பயிற்சி 6: புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களுக்கான அறிமுக பயிற்சி**

**காலப்பகுதி:** 2 நாட்கள் **வளவாளர்:** அனைத்து பிரிவுகளிலிருந்தும் தன்னார்வலர்கள்.

பங்கேற்பாளர்கள்: புதிதாக உள்வாங்கப்பட்ட முகாமைத்துவ உதவியாளர்கள்.

குறிக்கோள்:

- பனை அபிவிருத்திச் சபையின் நிதி மற்றும் நிர்வாக விதிமுறைகளை அறிமுகப்படுத்தல்.
- சபையின் வழமையான கடமைகள் தொடர்பான வழிகாட்டல்.
- சபையின் முழுமையான வரலாறு மற்றும் செயற்பாடுகளை விளக்குதல்.

## திட்டமிடல் பகுதி

திட்டமிடல் பிரிவானது பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்ளும் பொருட்டு 2017 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக சபையின் நிதி ஒதுக்கீடுகளிற்கமைய பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக திட்டமில் பிரிவானது ஒழுங்கமைக்கப்பட்டதுடன் சபையின் நடவடிக்கைகளை தங்குதடையின்றி மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதுடன் திட்டங்களின் நிலை தொடர்பாக காலத்திற்கு காலம் முகாமைக்கு அறிக்கையிடும் பணிகளும் திட்டமிடல் பகுதியின் பிரதான பணிகளில் ஒன்றாகும்.

மேற்படி நோக்கத்திற்காக திட்டமிடல் பிரிவிற்கு பின்வரும் பிரதான பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

- தரவு முகாமைத்துவம்
- திட்ட நடைமுறைப்படுத்தல்
- பெறுகை நடவடிக்கைகள்
- திட்ட கண்காணிப்பு மீளாய்வு

எப்படியாக இருந்த போதும் திட்டமிடல் பிரிவானது சிறப்பான திட்டங்களை திட்டமிட்டு மேற்கொள்வதற்கென சபையின் நோக்கிற்கமைய உருவாக்கப்பட்டிருந்த போதும், இதற்கான உரிய அனுமதிக்காக அமைச்சிற்கும் தாபன கிளைக்கும் அனுமதிக்காக தேவையான நடவடிக்கைகள் செய்யப்பட்டு வருவதுடன், இதற்கான அனுமதியானது வெகுவிரைவில் கிடைக்குமென எதிர்பார்ப்பதுடன் அதன் சீரான இயங்குநிலைக்கு தேவையான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

### திட்டமிடல் பிரிவின் செயற்பாடுகள்

- எதிர்கால திட்டங்களை சிறப்பாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு தேவையான பாதீட்டு தயாரிப்புக்கு தேவையான பல விடயங்கள் இப்பகுதியின் ஊடாக செயற்படுத்தப்படவுள்ளது.
- செயற்பாட்டுத் திட்டம்
- பெறுகைத்திட்டம்
- 2018ம் ஆண்டில் மொத்தமாக 116 பெறுகை செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவற்றில் 76 மூலதன நிதிக்குரியதாவும் 40 மீண்டெழும் செலவினத்திற்குரியதாகவும் அமைந்துள்ளது.
- கண்காணிப்பு மற்றும் மீளாய்வு நடவடிக்கைகளிற்காக மாதாந்த அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றது.

## உற்பத்திப் பிரிவு.

பனை அபிவிருத்திச் சபையானது உண்ணக்கூடிய உணவுப்பொருளாகவும், உணவற்ற பொருளாகவும் பனைசார்ந்த உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்கிறது. உண்ணக்கூடிய பொருட்கள் பிரதானமாக பனம்பழத்திலிருந்து பெறப்படுகின்றது. மேலும் உணவற்ற பொருட்கள் மற்றும் குடிவகைகள் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றது.

1. **கைதடி உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தும் மையம் உருவாக்கப்பட்டது:** சுதந்திரமாக செயல்படக்கூடிய வகையிலும் உற்பத்திக்கும் சந்தைப்படுத்தலுக்கும் நல்ல அடித்தளத்தை அமைக்கும் வகையிலும் இது உருவாக்கப்பட்டது.
2. உற்பத்தி ஊழியர்களுக்கு ‘ஸ்மெக் கம்மனியில்’ பொதியிடல் பயிற்சி வழங்கப்பட்டது.
3. புதிய பொதியிடல் தொழில் நுட்பமானது பழரச பானத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.
4. பனைவெல்ல உற்பத்தி காரைநகர் தொழிற்துறை வளாகத்தில் நடைபெற்றது.

**கடந்த இரண்டு வருடங்களில் உற்பத்தி அளவு:**

| **உற்பத்திகள்** | | **2017** | **2018** |
|---|---|---|---|
| **பதனீர் சார்ந்த உற்பத்திகள்** | | | |
| பனங்கட்டி உற்பத்தி | மொத்த உற்பத்தி கி. கிராம் | 10,595.9 | 17,760.72 |
| பனம்பாணி உற்பத்தி | மொத்த உற்பத்தி லீற்றரில் | 6,958.6 | 4,745.44 |
| கல்லாக்கார உற்பத்தி | மொத்த உற்பத்தி கி.கிராமில் | 69.5 | 133.50 |
| **பனம்பழம்/ பனங்களி அடிப்படையான உற்பத்திகள்** | | | |
| பனங்கழி உற்பத்தி | மொத்த உற்பத்தி லீற்றரில் | 26,000 | 5,500 |
| பனங்கழி உற்பத்தி | மொத்த உற்பத்தி (750 மி.லீ) | 18,795 | 32,113 |
| மென்பான உற்பத்தி | போத்தல்களின் எண்ணிக்கை (190மி.லீ) | 2,954 | 3,182 |
| பனங்கிறஸ் உற்பத்தி | போத்தல்களின் எண்ணிக்கை (750மி.லீ) | 1,732 | 833 |
| ஜாம் உற்பத்தி | போத்தல்களின் எண்ணிக்கை (450கி) | 1,004.25 | 650.95 |
| பனாட்டு உற்பத்தி | மொத்த உற்பத்தி கி.கிராம் | 424.75 | 253.25 |
| பாணிப்பனாட்டு | மொத்த உற்பத்தி கி.கிராம் | 1,031 | 4514 |
| ஒயில் கேக் உற்பத்தி | உற்பத்தி செய்யப்பட்ட எண்ணிக்கை (கி) | 2,027 | 12,807 |
| பனம் பலகார உற்பத்தி | உற்பத்தியான பைக்கற் எண்ணிக்கை | 5,021 | 16,003 |
| **கிழங்கை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள்** | | | |
| பனங்கிழங்கு உற்பத்தி | மொத்த கொள்வனவு கி.கி | 3,223 | 2,592 |
| புழுக்கொடியல் உற்பத்தி | மொத்த கொள்வனவு கி.கி | 4,179.5 | 9,161.95 |
| சீவல் ஒடியல் உற்பத்தி | மொத்த கொள்வனவு கி.கி | 2,240 | 3,500 |
| புளுக்கொடியல் மா உற்பத்தி | மொத்த கொள்வனவு கி.கி | 1,859.5 | 2,592 |
| ஓடியல்க்கூழ் உற்பத்தி | மொத்த கொள்வனவு (150கி) | 4,603 | 596 |
| பாம்போசா உற்பத்தி | மொத்த கொள்வனவு கி.கி | 2,568.5 | 3,490 |

| | | | |
|---|---|---|---|
| **உற்பத்தி பெறுமதி** | **(மில்லியன்)** | **24.47** | **31.54** |

பனை அபிவிருத்திச் சபையானது யாழ்பாணம், கொழும்பு, மன்னார், மட்டக்களப்பு, புத்தளம், திருகோணமலை ஆகிய இடங்களில் உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ளது, உற்பத்தி நிலையங்களின் விபரம்

| **மாவட்டம்** | **பனை வெல்ல உற்பத்தி நிலையம்** | **பனங்களி உற்பத்தி நிலையம்** | **உணவும் மென்பான உற்பத்தி நிலையம்** |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | சிங்கைநகர் | சிங்கைநகர் | கைதடி |
| | காரைநகர் | | |
| மன்னார் | கட்டுக்காரன் குடியிருப்பு | படப்படி | |
| | தரவன்கோட்டை | | |
| | படப்படி | படப்படி | |
| வவுனியா | | | வவுனியா |
| திருகோணமலை | வரோதயநகர் | வரோதயநகர் | |
| மட்டக்களப்பு | | முகத்துவாரம் | |
| கொழும்பு | | | வெள்ளவத்தை |
| புத்தளம் | | கற்பிட்டி | |

## சந்தைப்படுத்தல் பிரிவு

பனை அபிவிருத்திச் சபையானது கற்பகம் விற்பனை நிலையத்தின் ஊடாக தனது சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை யாழ்ப்பாணம், கொழும்பு, மன்னார், மட்டக்களப்பு, புத்தளம், திருகோணமலை, திஸ்ஸமகராம ஆகிய இடங்களில் மேற்கொள்கின்றது.

### விற்பனை நிலையங்கள் (கற்பகங்கள்)

1) **யாழ் மாவட்டம்** - பருத்தித்துறை வீதி, நல்லூர்.
2) **யாழ் மாவட்டம்** - காட்சியறை சந்தைப்படுத்தும் பகுதி, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
3) **யாழ் மாவட்டம்** - இல. 129டி, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
4) **யாழ் மாவட்டம்** - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
5) **யாழ் மாவட்டம்** - யாழ்ப்பாணம் பஸ் நிலையம்
6) **கொழும்பு மாவட்டம்** - டவிள்யு டீ சில்வா மாவத்தை, கொழும்பு 06.
7) **கொழும்பு மாவட்டம்** - மெகா சிற்றி, காலி வீதி, கொழும்பு 06.
8) **மன்னார் மாவட்டம்** - மடு வீதி, மன்னார்.
9) **மன்னார் மாவட்டம்** - மன்னார் நகரம், மன்னார்.
10) **மட்டக்களப்பு மாவட்டம்** - 5, யுடிஎ கட்டடம், மட்டக்களப்பு.
11) **மட்டக்களப்பு மாவட்டம்** - காட்சியறை, வெளிச்சவீடு, மட்டக்களப்பு.
12) **திருகோணமலை** - மின்சார நிலைய வீதி, திருகோணமலை.
13) **வவுனியா** - 67/68 கடைவீதி, வவுனியா.
14) **அம்பாறை மாவட்டம்** - 107 டீ, மட்டக்களப்பு வீதி, கல்முனை.
15) **புத்தளம் மாவட்டம்** - புதிய பஸ் நிலையம். கல்பிட்டி.
16) **ஹம்பாந்தோட்டை** - புத்த விகாரைக்கு முன்னால் திசமகாரகம.
17) **ஹம்பாந்தோட்டை** - கதிர்காமம்.

**குறிப்பு :** அம்பாறை, புத்தளம் கற்பகங்கள் மூடப்பட்டு மாவட்ட காரியாலயத்தில் இயங்குகின்றது.

### மொத்த விற்பனை கற்பக விற்பனை நிலையங்கள் (2017-2018)

| கற்பகம் | 2017 | 2018 |
|---|---|---|
| யாழ் - நெடுந்தீவு | 142,108.00 | |
| யாழ் - நல்லூர் | 3,684,590.55 | 8,249,989.10 |
| யாழ் - காட்சியறை | 2,011,387.30 | 2,219,271.50 |
| யாழ் - கே.கே.எஸ் வீதி | 3,103,651.45 | 4,445,108.50 |
| யாழ் - பஸ் நிலையம் | 1,482,943.15 | 1,729,811.53 |
| யாழ் - கற்பகச்சோலை | 939,881.05 | 954,118.40 |
| யாழ் - களஞ்சியம் | 1,523,195.50 | 1,223,871.75 |
| பி.சி/ மெகா கொழும்பு | 355,380.00 | 3,649,478.06 |
| கொழும்பு - கற்பகம் | 7,388,009.15 | 7,025,238.15 |
| பொருட்காட்சி விற்பனை | 3,596,279.41 | 1,783,510.59 |
| நடமாடும் விற்பனை சேவை | 375,444.50 | 360,640.50 |
| வவுனியா | 7,035,297.00 | 7,704,947.00 |
| மட்டக்களப்பு - கற்பகம் | 798,364.05 | 2,294,006.10 |
| மட்டக்களப்பு - காட்சியறை | 465,899.25 | 1,268,282.25 |
| கல்முனை | 1,216,938.00 | 135,815.00 |
| மன்னார் மடு | 4,134,040.35 | 645,932.35 |
| மன்னார் நகர் | 111,345.00 | 2,698,113.00 |
| திருகோணமலை | 1,306,796.45 | 1,381,482.95 |
| கற்பிட்டி கற்பகம் | 351,137.50 | 313,915.00 |
| கதிர்காமம் கற்பகம் | 00 | 1,091,965.15 |
| திஸ்ஸமஹராம - கற்பகம் | 806,420.00 | 888,745.00 |
| முல்லைத்தீவு | 4,590.00 | 00 |
| வீரவில | 116,930.00 | 193,820.00 |
| **மொத்தம்** | **40,950,627.66** | **50,258,061.88** |

## ஆராய்ச்சிப் பிரிவு.

**பனை ஆராய்ச்சி நிறுவனம்**




பனை ஆராய்ச்சி நிறுவனம் தனது உயர்ந்த நோக்கத்தை அடையும் பொருட்டு தொழில்நுட்ப மாற்றத்திற்கான ஆராய்ச்சி பயிற்சி அத்துடன் ஆலோசனை சேவை அபிவிருத்தி மேம்படுத்தல் மக்கள் மயப்படுத்தல் ஆகியவற்றை ஒழுங்கு செய்வதன் ஊடாக பனை வளத் தொழிற்துறைக்கு சேவையாற்றி வருகின்றது. கடந்த கால அனுபவத்தினூடாகவும் தொடர்ச்சியான அடைவு மட்டங்களும் நான்கு ஆய்வுகூடங்களை கொண்ட இவ்வாராய்ச்சி பிரிவு 2018ம் ஆண்டின் செயற்றிட்டத்தின் ஊடாக பனை வளத்தின் தொழிற்துறைக்கு முக்கியமான செயற்பாடுகளை ஆற்றிவருகின்றது. பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் 2018ம் ஆண்டிற்கான செயற்பாடுகளின் கருப்பொருள் கீழே வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- ஐ எஸ் ஓ (ISO) அங்கீகாரம்
- ஆராய்ச்சி
- ஆராய்ச்சி முடிவுகளை பரப்புதல்
- ஆராய்ச்சி முடிவுகளை பிரசுரித்தல்






**ஐ எஸ் ஓ (ISO) அங்கீகாரம்**

பனை ஆராய்ச்சி நிறுவனம் ஆவணி 2017 இல் இரசாயன பகுப்பாய்வு ஆய்வகத்தின் வேதியியல் நோக்கத்திற்கு ஐ.எஸ்.ஓ அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. மற்றும் ஆய்வகத்திற்கான ஐ.எஸ்.ஓ அங்கீகாரத்தைத் தக்கவைக்க 2018ஆம் ஆண்டில் இலங்கை அங்கீகார வாரியம் (SLAB) 1 மற்றும் 2 வது கண்காணிப்பு மதிப்பீடுகளை மேற்கொண்டது. சோதனை ஆய்வகம் மற்றும் சோதனை சேவைகளின் தேவையான தரநிலைகள் ஐ.எஸ்.ஓ 17025 தேவைகளுக்கு இணங்க பராமரிக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தில் தயாரிப்புகளின் தரத்தை பராமரித்தல் மற்றும் உறுதிப்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், நுண்ணுயிரியல் ஆய்வகம் ஐ.எஸ்.ஓ 17025 தேவைகளுக்கு இணங்க புதிதாக உருவாக்கப்பட்டது மற்றும் நுண்ணுயிரியல் நோக்கத்திற்கு ஐ.எஸ்.ஓ அங்கீகாரத்திற்கு விண்ணப்பிக்க நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

**பரப்புதல்**

பனைஆராய்ச்சி நிறுவனத்தால் 2012 – 2017 வரை மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டவை பங்குதாரர்கள், தொழில் முனைவோர் மற்றும் பனையுடன் தொடர்புடையவர்களுக்கு ஒரு நாள் பயிற்சிப்பட்டறை, கள விஜயம், பனங்களி பாதுகாப்பு பயிற்சி, ஆர்.டி.எஸ் தயாரித்தல், பதநீர் தயாரித்தல் மற்றும் கண்காட்சி மூலம் பரப்பப்பட்டது. ஆர்.டி.எஸ் உருவாக்கம் 2018ம் ஆண்டு தொழிற்துறை அளவில் விண்ணப்பத்திற்கு முன்னெடுக்கப்பட்டது.

**ஆராய்ச்சி**

“பனங் களியிலிருந்து (Borassus flabellifer L.) இயற்கை நிறங்களை உற்பத்தி செய்வதற்கு நிறமிகளை பிரித்தெடுத்தல்” எனும் தலைப்பில் 2018ம் ஆண்டு ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சி ஆரம்பித்து முடிக்கப்பட்டது.

“புதுப்படுத்தப்பட்ட இளம் பனம் பழ கர்னலின் சேமிப்பு மற்றும் செயலாக்கத்தின் போது ஊட்டச்சத்துக்களில் ஏற்படும் மாற்றங்கள்” என்ற தலைப்பில் ஆராய்ச்சி 2018 இல் தொடங்கப்பட்டு முடிக்கப்பட்டது.

“பனை இலைகளில் இயற்பியல் வேதியியல் அளவுருக்கள் மாறுபாட்டை தீர்மானித்தல்” என்ற தலைப்பில் ஆராய்ச்சி 2018 இல் தொடங்கப்பட்டது.

**பிரசுரித்தல்**

பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் 2018ம் ஆண்டு வெளியீடுகளின் விபரம் கீழே வருமாறு:

**<u>இதழ் பிரசுரம்</u>**

- தர்மரட்டினம் ஜி, பொன்னுசாமி என், சிறிதயாளன் எஸ் (2018) பனை ஹாஸ்டோரியத்தின் பாதுகாப்பு,Young Fruit Kernel and Boiled Tuber with Lengthen Shelf-Life Consisting their Native Characters. Annals of Biological Research 9 (1): 30-39. ISSN: 0976-1233
- சிவாஜி எம், பாலசுப்பிரமணியம் ஏ, விஜேசிங்க WAJP, பண்டார SMIPG, சிறீதயாளன் எஸ் (2018) பனம்பழ களியின் ஊட்டச்சத்து பண்புகளில் சோடியம் மெட்டாசல்பைட்டின் விளைவு. IOSR சுற்றுச்சூழல் விஞ்ஞான நச்சுயியல் மற்றும் உணவு தொழில்நுட்ப பிரசுரம் (IOSR-JESTFT) 12 (2,1): 59-62. e-ISSN: 2319-2402,p- ISSN: 2319-2399

**<u>மாநாட்டு நடவடிக்கைகள்:</u>**

- ஷோபினி, என்.விக்ரமசிங்க, I., சுபாஷினி, எம். (2018) கள்ளு ஈஸ்டைப் (Yeast) பயன்படுத்தி பெக்டினேஸ் (Pectinase) பதப்படுத்தப்பட்ட பனங்களியிலிருந்து வைன் (Wine) தயாரித்தல். யாழ் பல்கலைக்கழகத்தின் 4வது சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டு செயற்பாடுகள் (JUICe2018).
- சிவராஜா. வி, டலுக்டெனிய டி.ஏ.சி.கே., அனுலஷ்ஷி பி., சிறிவிஜேந்திரன் எஸ். (2018) பனை மரத்தின் உருவாக்கமும் அபிவிருத்தியும் (Borassus flabellifer L.) பழ களி அடிப்படையிலான பால் பானம். யாழ் பல்கலைக்கழகத்தின் 4வது சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டு செயற்பாடுகள் (JUICe2018)
- பாலசிங்கம் எஸ்., சுரேந்திரன் எஸ்.என்., செந்தில்நந்தனன் எம்., மற்றும் சுபாஷினி, எம். (2018), Larvicidal Effect of Dried Palmyrah Fruit Pulp Extracts against Aedes aegypti. யாழ் விஞ்ஞான மன்றத்தின் 25வது வருட அமர்வின் செயற்பாடுகள், p06.
- ஷோபினி, என்.விக்ரமசிங்க, சுபாஷினி, எம். (2018) பனங்களியில் பெக்டிஸே என்சைம் (pectinase enzyme) செயன்முறையை தெளிவுபடுத்தல். உணவு விஞ்ஞான மற்றும் ஊட்டச்சத்துக்கான சர்வதேச பிரசுரம், தொகுதி 3: வெளியீடு 5: புரட்டாதி 2018: பக்க இல. 178-18.

**செயற்பாட்டுப் பெறுபேறுகளின் மீளாய்வு**

| விபரம் | 2018 | 2017 |
|---|---|---|
| விற்பனைப்புரள்வு | 50,258,061.88 | 40,950,627.66 |
| விற்பனை இலாபம் | 10,040,000.02 | 11,198,073.29 |
| ஏனைய வருமானம் | 3,613,885.80 | 5,398,288.21 |
| இலாபம் ( நட்டம் ) | (98,799,417.31) | (131,952,114.69) |
| தேய்மானம் தவிர்ந்த இலாபம் (நட்டம்) | (34,341,607.16) | (46,148,084.24) |
| அரச பங்களிப்பு – மீண்டுவரும் | 119,996,000.00 | 111,500,000.00 |
| அரச பங்களிப்பு –மூலதனம் | 34,175,000.00 | 36,000,000.00 |
| உத்தியோகத்தர் தொகை | 215 | 214 |

| **நிதியியல் மீளாய்வு** | 2018 | 2017 |
|---|---|---|
| வருடத்திற்கான ஆரம்ப மிகுதி | 1,668,936.11 | 4,948,373.26 |
| **பணக்கொடுப்பனவற்ற அசைவு** | | |
| தேய்மானம் | 41,554,600.13 | 57,166,961.79 |
| கடன்பட்டோர்களின் அதிகரிப்பு/ குறைவு | 22,903,654.92 | 28,637,068.66 |
| கடன்பட்டோர்களின் அதிகரிப்பு/ குறைவு | (2,306,322.83) | 1,449,418.28 |
| கடனாளர்களின் அதிகரிப்பு/ குறைவு | 9,061,549.62 | (6,496,094.94) |
| கையிருப்பின் அதிகரிப்பு/ குறைவு | 1,355,854.77 | (5,713,351.89) |
| முன்னைய வருட சீராக்கல். | - | 4,998,318.87 |
| **மொத்த பணக்கொடுப்பனவற்ற அசைவு** | 72,569,336.61 | 80,042,320.77 |
| | 74,238,272.72 | 84,990,694.03 |
| **உட்பாய்ச்சல்** | | |
| விற்பனைப் புரள்வு | 50,258,061.88 | 40,950,627.66 |
| ஏனைய வருமானம் | 3,613,885.80 | 5,398,288.21 |
| அமைச்சு | 22,000,000.00 | 83,026,000.00 |
| என்.ஜி.ஓ | - | - |
| | 75,871,947.68 | 129,374,915.87 |
| திறைசேரி மானியம் | | |
| – மீண்டுவரும் | 119,996,000.00 | 111,500,000.00 |
| –மூலதனம் | 34,175,000.00 | 36,000,000.00 |
| **மொத்த மானியம்** | 154,171,000.00 | 147,500,000.00 |
| | 304,281,220.40 | 361,865,609.90 |
| **வெளிப்பாய்ச்சல்** | | |
| மீண்டுவரும் செலவினம் | 181,321,028.25 | 158,748,429.79 |
| மூலதனச் செலவினம். | | |
| நிலையான சொத்துக்கள் | 31,108,111.78 | 70,395,643.22 |
| ஆராய்ச்சி அபிவிருத்தி | 38,447,224.56 | 59,605,597.57 |
| பயிற்ச்சித் திட்டங்கள் | 40,981,368.11 | 51,386,170.05 |
| பனை நடுகை/ அபிவிருத்தி செலவினங்கள் | 11,918,188.92 | 20,060,833.15 |
| **மொத்த வெளிப்பாய்ச்சல்** | 303,775,521.62 | 360,196,673.78 |
| **வருடத்திற்கான இறுதி மீதி.** | 505,298.78 | 1,668,936.12 |

**ஆபத்து முகாமைத்துவம்**

